மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

சொந்தக் கட்டடம்

*1779—**திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், வண்டியூரிலுள்ள கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை கிழக்கு தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், வண்டியூரிலுள்ள கிளை நூலகம் தற்போது வாடகைக் கட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட சர்வே எண் 118/7—ல் 2025 சதுர அடி காலிமனையை மாநகராட்சியிலிருந்து பத்திரப் பதிவு செய்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காலிமனை பெறப்பட்டதும், மேற்படி இடத்தில் 2 தளங்கள் கொண்ட கட்டடம் 2000 சதுர அடி பரப்பளவில், சுமார் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.*

திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர், குடும்பத்தின் குலவிளக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உடல் மண்ணுக்கு,*

உயிர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்று கூறி, நீண்ட நாள் கோரிக்கையாகக் கிடந்த, கிடப்பில் போடப்பட்ட, இந்த நூலகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் இதைச் செய்து தருகிறார்களென்று சொன்னால், அதுதான் தமிழ் நாட்டு மக்கள்மேல் அவர்கள் வைத்திருக்கின்ற பாசம் என்பதை இந்தப் பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், இந்த நூலகத்தில் 97 நாளிதழ்களும், 30,000–க்கும் மேற்பட்ட நூல்களும் உள்ளன. இப்பேற்பட்ட ஒரு நூலகத்திற்குக் கட்டடம் அமைத்துத் தருவதற்கு முன்வந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் மேல் மாடியில் இயங்கிவரும் நூலகத்திற்குப் புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்ற நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு தாராளமாக நிதி இருக்கின்றது. ஆனால், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் இடத்தைப்பெற்று அதை நூலக ஆணைக் குழுவிற்குப் பதிவுசெய்து கொடுத்தால் கண்டிப்பாக அந்த இடத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மைய நூலகத்தில் (Central Library) 10 பணியிடங்களில் 3 பணியிடங்களில் மட்டுமே இப்பொழுது ஆட்கள் இருக்கின்றார்கள். First Grade Librarian ஒருவர் இருக்கிறார். Second Grade Librarian இரு பணியிடங்களும் காலியாக இருக்கின்றன. Third Grade Librarian 2 பணியிடங்களில் 2 பேர்கள் இருக்கின்றார்கள். Record Clerk–2, Office Assistant–2, Computer Operator–1 ஆக, இந்த 5 பணியிடங்களும் காலியாக இருக்கின்றன. அப்பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கட்டடம் கட்டுவதைப் பற்றியது. இருந்தாலும் பள்ளிக் கல்வி மானியத்திலே, நூலகங்களில் இருக்கின்ற 1029 காலிப் பணியிடங்களில் ஊர்ப்புற நூலகர்களை நியமிப்பதற்கு அம்மா அவர்கள் அனுமதித்திருக்கின்றார்கள். விரைவிலே அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவரின் பொற்கால ஆட்சியில் அவரது திட்டங்கள் அனைத்தையும் மறவாமல் மன்னார்குடியில் எனக்கு வாக்களித்து, உதயசூரியனை வெற்றிபெறச் செய்த அனைத்து மக்களுக்கும், தமிழினத் தலைவருக்கும், தமிழினத் தளபதிக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். உங்கள் மூலமாக அமைச்சருக்கு ஒரு கேள்வி. மன்னார்குடியில் இயங்கிவரும் மிகப் பழமையான ஒரு நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல் இருந்தது. அதற்கான காரணம் சரியான இடம் கிடைக்காததுதான். சென்ற நகராட்சிக் கூட்டத்தில் அதற்கான இடத்தை ஒதுக்கீடு செய்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது அரசாங்கத்திற்குப் பரிந்துரையும் செய்து அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கட்டடம் கட்டும் வேலை துரிதப்படுத்தப்படுமா என்பதுதான் கேள்வி.

2011 செப்டம்பர் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நகராட்சி மூலமாக அந்த இடம் மாவட்ட ஆட்சியாளர் வழியாக மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டால் அந்த இடத்தில் கட்டடம் கட்டிக் கொடுப்பதிலே நூலக ஆணைக் குழுவிற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, 1–வது வட்டம், யூனியன் கார்பைடு குடியிருப்பில் ஒரு நூலகம் இல்லை. சுற்றிலும் 50,000 மக்கள் வாழக்கூடிய அந்த மொத்தப் பகுதியிலுமே நூலகம் இல்லை. குடியிருப்போர் சங்கமே இடமும் வைத்திருக்கின்றார்கள். கட்டடமும் கட்டி வைத்திருக்கின்றார்கள். ஒரு நூலகம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே இது குறித்து மனுவும் கொடுத்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு நூலகத்தை உருவாக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5,000 முதல் 50,000 மக்கள்தொகை கொண்ட பகுதியிலே கண்டிப்பாக ஒரு கிளை நூலகம் ஆரம்பித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, அங்கே கட்டடம் இருந்து, 50,000 மக்கள் தொகையும் இருக்குமேயானால், கண்டிப்பாக அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று, அங்கே நூலகம் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

தார்ச் சாலை

* **755—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட வனப் பகுதியில் காமராஜர்புரம் முதல் கிழவன்கோவில் வரை தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள காமராஜர்புரம் மற்றும் கிழவன்கோவில் வரையிலான 8.1 கிலோ மீட்டர் தொலைவுள்ள வனச் சாலையினை 6 மீட்டர் அளவிற்கு அகலப்படுத்தப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதில் 7 கிலோ மீட்டர் தூரம், திருவில்லிபுத்தூர் சரணாலயப் பகுதியிலும், 1.1 கிலோ மீட்டர் தேனி வனக் கோட்டப் பகுதியிலும் வருகிறது. இச்சாலையின் பெரும் பகுதி, சரணாலயப் பகுதியில் வருவதால், மத்திய வன உயிரின வாரியத்திடம் அனுமதி பெறப்பட்டுள்ளது. இச்சாலை அமைக்க வேண்டிய பகுதிகளில், இயற்கையாக வளர்ந்துள்ள 620 மரங்கள் வெட்டப்பட வேண்டியுள்ளதால், உச்ச நீதிமன்றத்தின் அனுமதி பெற, வாதுரை தயார் செய்து மத்திய அதிகாரக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அதிகாரக் குழுவின் ஆணை பெறப்பட்டவுடன் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்கீழ், மத்திய அரசின் முன் அனுமதி பெற்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இச்சாலையைச் சீரமைத்துக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.